# த பினான்ஸ் பிஎல்சி (TFC)
# வைப்பாளர்களுக்கான அறிவித்தல்

நிதி தொழிலை மேற்கொள்வதற்கு த பினான்ஸ் பிஎல்சிக்கு வழங்கப்பட்ட உரிமம் 22.05.2020 இல் இருந்து அமுலுக்கு வரும் வகையில் இரத்துசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை வைப்புக்காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்தின் ஏற்பாடுகளிற்கிணங்க காப்புறுதி செய்யப்பட்ட அனைத்து வைப்பாளர்களுக்கும் ரூ.600,000 வரை இழப்பீடுகளைச் செலுத்துவதற்கான முன்னாயத்தங்களை இலங்கை மத்தியவங்கி மேற்கொள்ளும். நிலுவை ஏதாவது இருப்பின், த பினான்ஸ் பிஎல்சிக்குச் சொந்தமான சொத்துக்களைத் திரவத்தன்மைக்கு மாற்றிய பின்னர் செலுத்தப்படலாம்.

மத்திய வங்கியால் இந்நோக்கத்திற்காக முகவர் வங்கியாக நியமிக்கப்பட்ட மக்கள் வங்கி ஊடாக இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். 2020 யூன் 7ம்திகதி முதற்கட்டக் கொடுப்பனவுகள் த பினான்ஸ் கிளைகள் முன்னர் அமைந்திருந்த இடத்தில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் ஆரம்பிக்கப்படும்.

அதற்கிணங்க, தேசிய அடையாள அட்டை மூலம் திறக்கப்பட்ட தனிநபர் கணக்காக ஒரேஒரு கணக்கை (நிலையான வைப்பு அல்லது சேமிப்புக்கணக்கு) மட்டும் பேணுவோர் அவர்களது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்(தேசிய அடையாள அட்டை கட்டாயமானது), முதலீட்டு சான்றிதழ்களின் மூலப்பிரதிகள்(நிலையான வைப்புச் சான்றிதழ்கள் அல்லது சேமிப்புப் புத்தகங்கள்) மற்றும் ஏனைய வேண்டப்பட்ட ஆவணங்கள் ஆகியனவற்றை இழப்பீட்டைக் கோருவதற்காக தொடர்புடைய மக்கள் வங்கிக் கிளைக்குச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள். அதனைத் தொடர்ந்து வெகுவிரைவில் ஏனைய அனைத்து வைப்பாளர்களுக்கும் இது தொடர்பில் அறிவித்தல் விடுக்கப்படும்.

**முதலாம் கட்டம்: இது கண்டிப்பாக தேசிய அடையாள அட்டையினால் மட்டுமே திறக்கப்பட்ட தனிநபர் கணக்காக ஒரே ஒரு கணக்கை மட்டும் வைத்திருப்போருக்குரியது.**

**மேலதிக விசாரணைகளுக்கு தொலைபேசி**

**மக்கள் வங்கி**
**0112 481 594, 0112 481 320**
**0112 481 612, 0112 481 703**

**இலங்கை மத்திய வங்கி**
**011 2398788, 011 2477261**

**பணிப்பாளர் - தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம்,**
இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01